# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

***2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அஜித் பி. பெரேரா அவர்களால் 2013, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***268 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007652 -350 (2013/10)

**இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்**
**(கூட்டிணைத்தல்) (திருத்தம்)**

## *2000 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொனதொரு சட்டம்*

*முன்னுரை.*

இலங்கை வரிவிதிப்பு நிறுவகமானது 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்டுள்ளதாதலாலும் :

இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) இப்போது அதன் பெயரை "இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகம்" என மாற்றுவதற்கு விரும்புகின்றதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட இலங்கை வரிவிதிப்பு நிறுவகமானது அதன் பெயரில் அத்தகைய மாற்றத்துக்கு பயன்கொடுப்பதற்கு சொல்லப்பட்ட சட்டத்தை திருத்துவதற்கு இப்போது விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :-

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்துக்கான பொதுத் திருத்தம்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தில் அப்பெயராயினுஞ்சரி அல்லது வேறு சுருக்கப்பெயரின் மூலமாகவேனும்சரி இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் எனக் குறிப்பிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தின் பெயரின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சட்டத்தின் விரிவுப்பெயரில் அல்லது ஏதேனும்

விதியில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணம் தவிர சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய "இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், வழக்குகள், மேன்முறையீடுகள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் இன்னும் பலவற்றை தொடர்தல்.

**3.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் "இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகத்தினால்" அல்லது அதன் சார்பில் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தகையதுமான எல்லா ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், சான்றிதழ்கள் அல்லது வேறு சாசனங்கள் அல்லது ஆவணங்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அல்லது பின்னரும் இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பில் ஆக்கப்படுகின்றதாகவும், வழங்கப்படுகின்றதாகவும் அல்லது நிறைவேற்றப்படுகின்றதாகவும் அத்துடன் ஆக்கப்பட்டதாகவும் வழங்கப்பட்டதாகவும் அல்லது நிறைவேற்றப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு உடன்முன்னரான நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா துடர்ச்சிகள், வழக்குகள், மேன்முறையீடுகள் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைமுறைகள் தணிக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதலாகாது என்பதுடன் இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்படலாம் அல்லது வலுவுறுத்தப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு உடன்முன்னரான நாளன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைகள், பொறுப்புகள், கடப்பாடுகள் தவிர இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தின் எல்லா உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் என்பன இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகத்தின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுன்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(ஆ) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் -

''(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையைப் பெற்றுள்ளவர்களும் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்காக வரிவிதிப்புத் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களுமான ஆட்கள் பேரவையின் அங்கீகாரத்துக்குட்பட்டு பட்டயவரி ஆலோசகராகத் தொழில்புரிவதற்கும் ''பட்டயவரி ஆலோசகர்'' என்ற விவரணத்தைப் பயன்படுத்த உரித்துடையோராதல் வேண்டும்.

(இ) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''உறுப்பாண்மை முதலியவற்றுக்கான தகவுடைமை.''.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவின் அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்துதலும், ஒவ்வொருவகை உறுப்பினராலும் செலுத்தப்பட வேண்டியதான கட்டணம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்துதலும், உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும் மற்றும் உறுப்பாண்மையை மீளப் புதுப்பித்தலும், ஒவ்வொருவகை உறுப்பினராலும் செலுத்தப்படவேண்டியதான கட்டணம்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன்மூலமும் :-

*"பெயரின் பின்னால் பட்டங்களைப் பயன்படுத்தல்.*

9. கூட்டுத்தாபனத்தின் இணைப்பினரொருவர் தமது பெயரின் பின்னால் எப்சிஐரி என்னும் எழுத்துக்களை பயன்படுத்துவதற்கு உரித்துடைய வராதல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாப னத்தின் கூட்டுறுப்பினரொருவர் அதேமுறையில் ஏசிஐரி என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்து வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். கௌரவ இணை உறுப்பினர் ஒருவரும் அல்லது கௌரவ கூட்டுறுப்பினரும் விடயத்துக்கேற்ப முறையே கௌரவ எப்சிஐரி அல்லது கௌரவ ஏசிஐரி என்னும் பட்டங்களை அதேமுறையில் பயன்படுத் தும் உரித்துடையவராதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு "தமது பெயரின் பின்னர் எப்ரிஐஐ (இலங்கை) அல்லது கௌரவ ஏரிஐஐ (இலங்கை) எனும் பட்டங்களை அல்லது எழுத்துக்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்துக்கேற்ப எப்சிஐரி, கௌரவ எப்சிஐரி, ஏசிஐரி அல்லது கௌரவ ஏசிஐரி எனும் பட்டங்களை அல்லது எழுத்துக்களை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்